(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1 (3).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2010, யூன் 21, திங்கட்கிழமை வெளியிடப்பட்டது

## 2010, யூலை 03, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0290/ '10

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக பாதையை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2000 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் கொரிய நாட்டு ஒப்பந்தக்காரர் ஒருவரோடு செய்துகொள்ளப்பட்டதென்பதையும்,

(ii) 2003 ஆம் ஆண்டு சனவரி மாதம், அதாவது, ஒப்பந்த காலம் முடிவடைவதற்கு 10 மாதங்களுக்கு முன்னரே புரிந்துணர்வொன்றின் அடிப்படையில் அவ்வொப்பந்தத்தை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதையும்,

(iii) 9,516 மில்லியன் ரூபா பெறுமதியான அவ்வொப்பந்தத்தில், 5,444 மில்லியன் ரூபாவினை ஒப்பந்தக்காரருக்கு அந்தச் சந்தர்ப்பம் வரை செலுத்தப்பட்டிருந்த தென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மீண்டும் 22,800 மில்லியன் ரூபா தொகையொன்றிற்கு அதே பாதையை நிர்மானித்து முடிப்பதற்காக பிரான்ஸ் நாட்டு கம்பனி ஒன்றுடன் 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதி ஒப்பந்தமொன்று செய்து கொள்ளப்பட்டதென்பதையும்,

(ii) அந்த நிர்மாண ஒப்பந்தமும் தோல்வியில் முடிவடைந்ததென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) அக்கருத்திட்டம் தோல்வியில் முடிவுற்றதால் ஏற்பட்ட நட்டத்தின் மொத்தப் பெறுமதி என்னவென்பதையும்,

(ii) அக்கருத்திட்டத்தின் காலதாமதத்திற்கு பொறுப்புக் கூறவேண்டியவர்களின் பெயர்கள் என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0291/ '10

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2006 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின்படி சுனாமி அனர்த்த பிரதேசங்களின் புனர் நிர்மாணிப்பு (தென் மாகாண புனர் நிர்மாணிப்பு) கருத்திட்டத்தின் கீழ் திட்டமிடல், மதிப்பீடுகளை மேற் கொள்வதற்காக தனிப்பட்ட ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டு, அவருக்கு 12,228,679 ரூபா செலுத்தப்பட்டதென்பதையும்,

(ii) கருத்திட்டத்தின் பிரதான பகுதியொன்று அரசாங்க உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட்டிருந்தும் பெரும் தொகையொன்றினை வழங்கி பிரதானமற்ற பகுதியொன்றினை வெளியாருக்கு வழங்குவது சிக்கனமற்ற ஒரு கொடுக்கள் வாங்கல் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) அவ்வாலோசகரின் பெயர், நியமனம், கல்வித்தகமை, வினைத்திறன் யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இவ்வாறானதோர் கொடுப்பனவு மக்களின் பணம் வீண்விரயம் செய்யப்பட்ட ஒன்று என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2010, யூலை 05, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0056/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை கல்வி வலயத்திற்குட்பட்ட அங்குணுகொலபெலஸ்ஸ கோட்டக்கல்வி காரியாலயத்தினால் மேற்பார்வை செய்யப்படும் தஹஅமுண மற்றும் ஹுன்னக்கும்புர ஆகிய ஆரம்ப பாடசாலைகள் 03 ஆண்டு காலமாக மூடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி இரண்டு பாடசாலைகளைக் கொண்டு நடத்துவதற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் தற்போதைய நிலை என்னவென்பதையும்,

(ii) அப்பாடசாலைகளை நிர்மாணிப்பதற்கென செலவு செய்யப்பட்ட பணத்தின் தற்போதைய பெறுமதி எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைக் கட்டடங்கள் அழிவடைந்தால் அந்த இழப்பை ஏற்பது யார் என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்கட்டடங்களை வேறொரு கருமத்திற்காகப் பயன்படுத்த அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ii) மேற்படி கட்டடங்களைப் புனரமைத்து பயன்பாட்டிற்கு எடுக்காவிடின், வேறு நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக கட்டிடங்களையும் நிலத்தையும் விடுவிக்க உடன்படுகிறீர்களா,

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

0058/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு 06 மாதங்களுக்கு முன்னர் தார் இடப்பட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஓக்கேவெல பிரதேச செயலாளர் பிரிவின் மொரகந்தகொட கிராம உத்தியொகத்தர் பிரிவில் உள்ள மொரகந்தகொட பன்சல வீதி 100 மீற்றர் தொலைவுக்கு தார் கழன்று போக்குவரத்து செய்ய முடியாத நிலைமைக்கு உள்ளாகியுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளனவா என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0097/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 1995 இலிருந்து இற்றைவரையில், இலங்கை மின்சார சபை ஈட்டிய தேறிய இலாபத்தினை அல்லது நட்டத்தினை வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) (i) ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் விதிகளுக்கு அமைய பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறில்லையெனின், பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடு செய்யப்பட்டவாறான இலாபம் மற்றும் நட்டத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) 2007, 2008, 2009 ஆண்டுகளில் டிசெம்பர் 31 வரையிலும் மற்றும் இன்றுள்ளவாறாகவும் இலங்கை மின்சார சபையின் குறுகியகால, நீண்டகால மற்றும் மொத்தக் கடனை வெவ்வேறாக அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) கடந்த நான்கு வருடங்களில் கடன் வழங்கும் முகவர்களினால் மீள அறவிடப்பட்ட கடனையும்,

(ii) தொகையினையும், வட்டி வீதத்தினையும்,

(iii) இலங்கை மின்சார சபையின் கடனை தவணை முறையில் மீளச் செலுத்தல் திட்டத்தினை வட்டியுடனும் முதலுடனும் வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறியத்ருவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0022/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மரபுரிமைகள், கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

அ) தற்போது இருக்கும் சட்ட நிலவரங்களுடன்,

(i) வயது வந்தோருக்கு மட்டுமான படங்களின் தற்போதைய நிலையினையும்,

(ii) பொது அரங்காட்டச் சபை உறுப்பினர்களையும்,

(iii) தணிக்கை செய்யப்படும் திரைப்படங்கள் அல்லது தொலைக்காட்சி நாடகங்களின் எண்ணிக்கையினையும், மேலும்

(iv) பொது அரங்காட்டச் சபையினால் வெளிநாட்டுத் திரைப்படங்களையும், DTH நேரடியாக வீட்டிற்கு ஒளிபரப்பும் முறையையும் தணிக்கை செய்ய முடியுமா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

0107/ '10

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) ஐ.நா வின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரின் பணிப்புரையின்பேரில், கண்ட்ரி ஒப் ஒரிஜின் ரிசேர்ச் அண்ட் இன்போமேசன் எனும் நிறுவனத்தினால், 2010 ஏப்ரல் மாதத்தில் இலங்கை பற்றிய அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கைச் சிறைச்சாலைகள் பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் சரியானவையா என்பதையும்,

(ii) இலங்கைச் சிறைச்சாலைகளின் நிலைமைகளை முன்னேற்றுவதற்காக சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பான எந்தவொரு அமைச்சினாலும் கடந்த இருபது வருடங்களாகத் தயாரிக்கப்பட்ட விதப்புரைகளையும்,

(iii) அத்தகைய விதப்புரைகள் அமுல்படுத்தப்பட்டனவா என்பதையும்,

(iv) இல்லையெனின், அத்தகைய எந்த விதப்புரைகளும் விரைவாக அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பதோடு, அதுபற்றி பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0270/ '10

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— தேசிய மரபுரிமைகள், கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கண்டிய நடனம் மற்றும் பேரிகை வாசித்தலுக்கு அரச மற்றும் ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்படும் பயிற்சி வாய்ப்புக்களையும்,

(ii) இந்நடன வகைகளில் சிறந்தவற்றை தொலைக்காட்சி மற்றும் திரைப் படங்களுக்காக ஒலி/ஒளிப்பதிப்பு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளையும்,

(iii) இத்துறையில் பயிற்சிக்கான வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கும், மரபு ரீதியான நடனவகைகளைக் கற்பதையும் பேணிப்பாதுகாத்தலையும் உறுதிப்படுத்துவதற்கும் அவர் நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்,

(iv) இவற்றையும் பரத நாட்டியம் உட்பட ஏனைய மரபு ரீதியான நடனவகைகளையும் வெளிக்கொணரும் நடனத்திற்கான தேசிய அரங்காற்றுகைப் பயிற்சி நிலையமொன்று நிறுவப்படுவதை அவர் ஊக்குவிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0264/ ‘10

கௌரவ ரஊப் ஹகீம்,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) கடுகன்னாவ, குருகுன்தல, 18 ஆம் இலக்க இல்லத்தில் வதியும் பட்டதாரி ஆசிரியரான திரு. எஸ்.எம்.எம். ஹலீம் 2010.02.01 ஆம் திகதி தனது வேலைத்தளமான மாவனெல்ல சாஹிரா தேசிய பாடசாலையில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் வெளி நபர் ஒருவர் பாடசாலைக்குள் அத்துமீறி நுழைந்து திரு. ஹலீமைத் தாக்கி இவரின் பிரத்தியேக வாகனமொன்றுக்கும் சேதம் விளைவித்துள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) திரு. ஹலீம், இது சம்பந்தமாக மாவனெல்ல பொலிஸ் நிலையத்தில் 273/06 ஆம் இலக்க, 2010.02.07 ஆம் திகதிய முறைப்பாடொன்றைச் செய்துள்ள போதிலும் அதுபற்றி இன்றுவரை முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(இ) அரச பாடசாலை வளவொன்றினுள், கடமைக்கு இடையூறு ஏற்படுத்தி ஓர் ஆசிரியரைத் தாக்கியமை தொடர்பாக செய்யப்பட்ட மேற்படி முறைப்பாடு குறித்து, பக்கச்சார்பற்ற விசாரணையொன்றை நடத்துவதற்கான உத்தரவொன்றை வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0266/ ‘10

கௌரவ ரஊப் ஹகீம்,— தேசிய மரபுரிமைகள், கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் (188ஆவது அதிகாரம்) கீழ் பாதுகாக்கப்பட வேண்டிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த புனித தலங்களாக (நினைவுத் தூபிகள்), மேற்படி அமைச்சினால் இதுவரையில் இலங்கையில் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள முஸ்லிம் சமயம் சார்ந்த புனித தலங்கள் மற்றும் முஸ்லிம் கலாசார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தலங்களின் பெயர்கள், விலாசங்கள், அவை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி மற்றும் குறித்த வர்த்தமானி இலக்கத்தினை மாவட்டரீதியில் வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2010, யூலை 06, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0063/ ’10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவின், பந்தேவெவ கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 250 ஆம் இலக்க வீதியில் பதலங்கலயிலிருந்து 1.5 கி.மீ. தூரம் வரை கொங்கிறீட் உடைத்து பாதை சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற பொது, நியமங்களுக்கேற்ப வேலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0064/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு 5 வருடங்களுக்கு முன்னர் தார் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவின், ஹக்பொருவ, அலியொழுஆர கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள அலியொழுஆர, நுகேயிலிருந்து ஹக்பொருவ வரையயுள்ள வீதியில் 1 கி.மீ. தூரம் வரை தார் கழன்று போக்கு வரத்துச் செய்ய முடியாத நிலைக்கு உள்ளாகியுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித்தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற போது, நியமங்களுக்கேற்ப வேலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0028/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடந்த 10 வருடங்களாக இலங்கை மத்திய வங்கி ஈட்டிய வருமானத்தையும்,

(ii) அரசாங்கத்தின் சார்பாக மத்திய வங்கியினால் வைக்கப்பட்டிருந்த உள்நாட்டு, வெளிநாட்டு ஒதுக்கீடுகளின் அளவையும்,

(iii) இந்த ஒதுக்கீடுகளினால் மத்திய வங்கிக்குக் கிடைத்த வருமானத்தையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அரசாங்க நிதிகள் (நிதி அதிகாரம்) இல்லாமை காரணமக கடந்த 7 வருடங்களில் மத்திய வங்கியினால் அரசாங்கத்திற்கு கடனாக வழங்கப்பட்ட தொகையை ஒவ்வோர் ஆண்டும் யூன் 30 ஆம் திகதியன்று, மற்றும் டிசம்பர் 31 ஆம் திகதியன்றும் உள்ளவாறு அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், என்?

0117/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையையும்,

(ii) அவை ஏதேனும் சர்வதேச தரவரிசையை அல்லது ஆசிய தரவரிசையை பெற்றுள்ளனவா என்பதையும்,

(iii) ஒவ்வொரு பல்கலைக்கழகத்தையும் நடத்துவதற்கான ஆண்டொன்றுக்குரிய செலவையும்,

(iv) ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையையும்,

(v) மாணவர் ஒருவருக்கான செலவையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களை இந்நாட்டிற்கு வந்து இயங்க வைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அத்தகைய பல்கலைக்கழகங்களின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0271 / '10

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அரச மற்றும் ஏனைய நிறுவனங்களால் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி வாய்ப்புகளை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா,

(ஆ) (i) குறிப்பாக, ஊடகவியலாளர்களைப் பயிற்றுவிக்கும் பிராந்திய நிறுவனங்களுடனான பரிமாற்றங்கள் ஊடாகவும், பிராந்திய மற்றும் சர்வதேச பத்திரிகைகள் மற்றும் ஏனைய ஊடகங்களை வாயிலான தொழில் பயிலுதல் ஊடாகவும் அந்தப் பயிற்சி வாய்ப்புகளை மேம்படுத்த அவர் நடவடிக்கைகள் மேற்கொள்வாரா என்பதையும்,

(ii) முறைப்பாடுகளை விரைவாகக் கையாளுவதோடு மாத்திரமல்லாது, பத்திரிகைகளைக் கண்காணித்து உண்மை தொடர்பான தவறுகள் மற்றும் ஏனைய நேர்மையற்ற நடத்தை ஆகியன தொடர்பாக அறிவுரையும் வழங்குமாறு பத்திரிகை முறைப்பாடுகள் ஆணைக்குழுவை ஊக்குவிப்பதற்கென அவர் அவ்வாணைக் குழுவுடன் கலந்துரையாடல்களை ஆரம்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0272/ '10

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கல்வியியல் கல்லூரிகளிலும் மற்றும் பிற ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும் கல்விசார் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பில் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குவிடம் பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளையும்,

(ii) அவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைக்கப்பெற்ற தீர்ப்புகளையும்,

(iii) மேற்படி தீர்ப்புகளுக்கு மதிப்பளித்து அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவ்வாறான பதவிகளுக்கான விளம்பரங்களில் வயதுத் தேவைப்பாடுகள் தொடர்பில் காணப்பட்ட முரண்பாடுகளையும்,

(ii) இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்ப்புகள் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும், ஆட்சேர்ப்புத் தேவைப்பாடுகள் தொடர்பில் முரண்பாடுகள் ஏதுமிருப்பின் அவற்றைத் திருத்துவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0301/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர, — நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2010 மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கிற்கு ஏற்ப, வாக்குறுதி அளிக்கப்பட்ட ரூ. 2500.00 சம்பள உயர்வு வழங்கப்படுமா என்பதையும்,

(ii) ஆமெனில், அதற்காக மதிப்பிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) மேற்படி சம்பள உயர்வுக்கு உரித்துடைய அரச ஊழியர்களின் எண்ணிக்கை யாவையென்பதையும்,

(iv) மேற்படி சம்பள உயர்வு வழங்கப்படும் திகதி எது என்பதையும்,

(v) வழங்கப்படும் ஏனைய சலுகைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0302/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தேசிய மரபுரிமைகள், கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) உலக மரபு உரிமையான சீகிரியாவில், குளவிக் கூடுகளைக் கலைப்பதற்காக இரசாயனப் பொருள் பாவிக்கப்பட்டதா என்பதையும்,

(ii) குளவிகள் கலைக்கப்பட்டதன் காரணமாக வேறு பூச்சி இனங்கள் அப் பிரதேசத்தினை ஆக்கிரமித்துள்ளனவா என்பதையும்,

(iii) ஆமெனில், அது தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாது என்பதையும்,

(iv) சீகிரியா தொல்பொருளியல் பிரதேசம் ஜப்பானிய கம்பனிக்கு விற்கப்பட்டு, குத்தகைக்கு விடப்பட்டு, அல்லது இதற்குச் சமனான ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சீகிரியா மலையடிவாரத்தில் மலசலகூடத்தொகுதியொன்று அமைக்கப்படுவது குறித்து அவர் அறிவாரா?

(இ) சீகிரியாவிற்கு குந்தகம் ஏற்படும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து நிர்மாணப்பணிகளையும் நிறுத்துவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2010, யூலை 07, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0065/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, அங்குணுபகொலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின், தெபொக்காவ தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள வெலே லிந்த வீதியில் 100 மீற்றர் தூரம் வரை கொங்கிறீட் உடைத்து பாதை சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற போது, நியமங்களுக்கேற்ப வேலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0066/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, அங்குணுபகொலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின், தெபொக்காவ வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கெரன்கொகுஆர வீதியில் 200 மீற்றர் தூரம் வரை கொங்கிறீட் உடைத்து பாதை சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற போது, நியமங்களுக்கேற்ப வேலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0038/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) காணிச்சீர்திருத்த ஆணைக் குழுவிற்குச் சொந்தமான காணிகளின் உரித்துரிமையானது ஒப்பந்தங்கள் எதுவும் செய்யப்படாமலே சட்டபூர்வமற்ற முறையில் பல்வேறு ஆட்களுக்கு மாற்றிக்கொடுக்கப்பட்டிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) எந்த அடிப்படையில் மேற்கூறப்பட்ட காணிகள் மாற்றிக் கொடுக்கப்பட்டன என்பதையும், பெற்றவர்களின் பெயர்கள் மற்றும் வழங்கப்பட்ட காணிகளின் அளவையும்,

(ii) இவ்வாறு சட்ட நடவடிக்கை முறையைப் பின்பற்றாது, அக்காணிகளை மாற்றிக் கொடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0044/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த ஐந்து வருடங்களாக,

(i) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, சீனி, கோதுமை மா, பருப்பு, பால்மா, வெங்காயம் மற்றும் மிளகாய் போன்ற வர்த்தகப் பண்டங்களின் மொத்த அளவு,

(ii) மேற்படி பண்டங்கள் மீது விதிக்கப்பட்ட தீர்வை, பெறுமதிசேர் வரி, உற்பத்தி வரி மற்றும்,

(iii) மேற்படி (ii) இற்கமைய, தீர்வைகள், மற்றும் வரி மூலமாக ஈட்டப்பட்ட மொத்த வருமானம் ஆகியவற்றை

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0275/ '10

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) தற்போது நீதித்துறை கட்டுப்பாட்டில் வைக்கப்படடிருக்கும் 25 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும் இது தற்போது நீதித்துறை கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருக்கும் சகலருள்ளும் எத்தனை பங்கு என்பதையும் அவர் கூறுவாரா?

(ஆ) 25 வயதிற்குக் கீழ்ப்பட்ட, குற்றமிழைத்ததாகச் சந்தேகிக்கப்படும் நபர்கள் தொடர்பான தற்போதைய தடுப்பு மறியலில் வைக்கும் மற்றும் தண்டனை வழங்கும் கொள்கையானது, தற்போதைய சமுகத் தேவைகளுக்கும் தண்டிப்பதை விட, புனருத்தாரனத்தைப் பின்பற்ற வேண்டிய தேவைக்கும் அமைவாக உள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 25 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களை தடுப்பு மறியலில் வைத்தல் மற்றும் தண்டித்தல் தொடர்பாக தற்போது அமுலிலுள்ள அணுகுமுறைகளிலிருந்து மாறுபட்ட அணுகுமுறைகளை மேற்கொள்ள ஊக்குவிக்கும் நீதிபதிகளுக்கும் ஏனையவர்களுக்குமான நிகழ்ச்சித்திட்டங்களை நீதிபதிகள் பயிற்சி நிறுவகம் நடத்துகின்றதா என்பதையும்,

(ii) இல்லையெனின், ஏன் அவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்படு வதில்லை என்பதையும்,

(iii) இது தொடர்பாக பரிகார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0297/ ‘10

கௌரவ சுனில் ஹந்துனெத்தி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) புகையிரதப் பாதைகளுக்குக் குறுக்காக அமைந்துள்ள அனேகமான வீதிகளில், புகையிரதத்தினால் ஏற்படக்கூடிய விபத்துக்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) மனிதவளப் பாதுகாப்புடன் தொடர்புடைய மேற்குறிப்பிட்ட பிரச்சினையைக் கருத்திற்கொள்ளாது இருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0303/ ‘10

கௌரவ தயாசிறி ஜயசேகர, — சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008, 2009 ஆம் ஆண்டுகளில் மருந்து கொள்வனவுக்காக சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) அத்தொகையில் மேற்படி ஆண்டுகளுக்காக அமைச்சுக்கு கிடைக்கப்பெற்ற உண்மையான பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(iii) ஒவ்வொரு ஆண்டிலும் மருந்து கொள்வைனவுக்கு நியமிக்கப்பட்ட குழுவின் அங்கத்தவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கடந்த காலங்களில் ஏற்பட்ட மருந்து பற்றாக்குறைக்கு காரணம் அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி போதாமையே என்பதனை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(இ) இன்றேல் ஏன்?

0273/ ‘10

கௌரவ ராஜீவ விஜேசிங்க, — பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) சர்வதேச நெருக்கடிகள் குழு என அழைக்கப்பபடும் ஓர் அமைப்பைப் பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வமைப்பு இலங்கையில் தற்போது தனது பிரதிநிதிகளைக் கொண்டுள்ளளதா, அல்லது கடந்த பத்து வருடங்களில் இலங்கையில் இருந்தனரா என்பதையும், பிரதிநிதிகளைக் கொண்டிருந்தனரா என்பதையும்,

(ii) எவ் ஏற்பாடுகளின் கீழ் அது இலங்கையில் செயற்பட்டது என்பதையும்,

(iii) அதன் சர்வதேச செயற்பாட்டாளர்களுக்கு எவ்வாறு வீசா வழங்கப்பட்டது என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) (i) இவ் அமைப்பினால் இலங்கையில் வேலைக்கமர்த்தப்பட்ட இலங்கையர் களின் பெயர்களையும்,

(ii) அவர்களது கல்வி அல்லது ஏனைய தகைமைகளையும்,

(iii) சர்வதேச நெருக்கடிகள் குழுவினால் (ICG) அவர்கள் ஒவ்வொருக்கும் செலுத்தப்பட்ட தொகையையும், செலுத்தப்பட்ட அடிப்படையயும்,

அவர் அறிவிப்பாரா?

(ஈ) (i) அவ் அமைப்பு அல்லது அதன் ஊழியர்கள் எவராவது இலங்கைக்கு வரி செலுத்த வேண்டிய கடப்பாடு உடையவர்களா என்பதையும்,

(ii) ஆம் எனில், அக்கடப்பாட்டை நிறைவேற்றியுள்ளனரா என்பதையும்,

அவர் அறிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

## 2010, யூலை 08, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0078 / '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் கொங்ரீட் இட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெலிஅத்த பிரதேச செயலாளர் பிரிவின் வகமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட வகமுல்ல, நியந்தகல வீதியின் 100 மீற்றர் வரையிலான தூரம் தற்போது கொங்கிரீட் உடைந்து குன்றும் குழியுமாக முழுமையாக சேதமடைந்த நிலையிலிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0045 '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இற்றை வரை கடந்த 10 வருடங்களுக்கான பணவீக்க வீதத்தையும்,

(ii) கடந்த 2 வருடங்களுக்கான பணவீக்க வீதத்தை மாதாந்த அடிப்படையிலும்,

(iii) கடந்த 10 வருடங்களுக்கான வட்டி வீதம், திறைசேரி உண்டியல் வீதம் மீள்கொள்வனவு வீதம் ஆகியவற்றையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0274/ '10

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) மாற்றுக் கொள்கைக்கான நிலையிடம் என்று அழைக்கப்படும் ஒரு நிறுவனத்தை அவர் அறிவாரா?

(ஆ) (i) வெளிநாட்டு நிதியளிப்பினால் இந்நிறுவனம் நன்மையடைந்துள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், கடந்த தசாப்தத்தின் ஒவ்வொரு ஆண்டிலும் பெற்றுக் கொண்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) பெற்றுக்கொண்ட மேற்படி வெளிநாட்டு நிதியங்கள், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டதா என்பதையும்,

(iv) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டு நிதிகளினால் ஈடு செய்யப்பட்ட மாற்றுக்கொள்கைக்கான நிலையத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் வரவு செலவுத்திட்ட விகிதத்தையும்

அவர் சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்த நிறுவனமோ அல்லது அதன் எவரேனும் பணியாளர்களோ இலங்கையில் வரி செலுத்தும் பொறுப்புடையோராய் உள்ளனரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் அவர்கள் தம் பொறுப்பைப் பூர்த்திசெய்துள்ளனரா என்பதையும்,

(iii) இந்த நிறுவனத்தின் பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய சிரேஸ்ட அதிகாரிகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட சம்பளம் மற்றும் ஏனைய நன்மைகள் எவ்வளவு என்பதையும்.

(iv) இவை தொடர்பாக வரி செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) மாற்றுக் கொள்கை நிலையத்தால் அமைக்கப்பட்ட துணை நிறுவனங்களின் பெயர்களையும், அவ்வற்றுக்கு எவ்வாறு நிதியீட்டம் செய்யப்பட்டது என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல் ஏன்?

0298/ '10

கௌரவ சுனில் ஹந்துனெத்தி,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2006 ஆம் ஆண்டு கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளதற்கமைய தென் மாகாணத்தின் புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக 4524 கொங்கிறீட் தூண்கள் தேவையாக இருந்த போது 6800 தூண்கள் கொள்வனவு செய்யப்பட்டது என்பதையும்,

(ii) இதற்கமைய 2276 கொங்கிறீட் தூண்கள் கூடுதலாக கொள்வனவு செய்யப் பட்டதால் 11.8 மில்லியன் ரூபா மேலதிகமாக செலவிடப்பட்டதென்பதையும்,

(iii) அந்த மேலதிக கொள்வனவு முறைகேடானது என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) இன்றேல், என்?

0304/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர, — பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தற்போதைய தேர்தல்கள் ஆணையாளர் ஓய்வுபெறும் திகதி யாதென்பதையும்,

(ii) இவருடைய தற்போதைய சம்பளம் எவ்வளவென்பதையும்,

(iii) ஓய்வுபெற வேண்டிய வயதை தாண்டிய நிலையிலும் அவரைத் தொடர்ந்தும் பணியில் ஈடுபடுத்தியதன் மூலம் இடம்பெற்றுள்ள இவருடைய மனித உரிமை மீறல் தொடர்பாக நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 17ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் தேர்தல்கள் ஆணைக்குழுவைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறெனில், அது எப்போதிருந்தென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

0276/ '10

கௌரவ ஆர். யோகராஜன்,— இளைஞர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் பெயர்களையும்,

(ii) இந்நிறுவனங்களில் நடத்தப்படுகின்ற கற்கைநெறிகள் அல்லது நிகழ்ச்சித் திட்டங்களின் பெயர்களையும்,

(iii) இக் கற்கைநெறியின் போதனா மொழிகளையும்,

(iv) ஒவ்வொரு கற்கைநெறிக்கும் போதனா மொழி ஒவ்வொன்றின் மூலமும் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையையும்

அவர் இச்சபையில் அறியத்தருவாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

0128/ '10

கௌரவ ஜெ. ஸ்ரீ ரங்கா,— இளைஞர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 மற்றும் 2010 (2010.04.01 வரை) ஆம் ஆண்டின் முதற் காலாண்டு ஆகியவற்றிற்கான இளைஞர் அலுவல்கள் அமைச்சின் வரவு செலவு ஒதுக்கீடு எவ்வளவென்பதையும்,

(ii ) 2009 ஆம் ஆண்டு மற்றும் 2010 ஆம் ஆண்டின் ஏப்பிறல் 1 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகையினையையும்,

(iii) ஒவ்வோர் மாவட்டத்திலும் எவ்வெந்த விடயங்களுக்காக அவை செலவிடப்பட்டன என்பதை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இளைஞர் அலுவல்களுக்காக ஒதுக்கப்பட்ட அப்பணத்தின் ஏதாவது ஒரு பகுதி அரசியல் விளம்பரங்களுக்காக செலவிடப்பட்டதா என்பதை அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0300/ '10

கௌரவ ஹரின் பர்னாந்து,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பதுளை ரம்புக்பொத்த ஊடாக கெந்தகொல்ல வரையிலான வீதியின் மலங்கமுவ ஓயாவுக்குக் குறுக்காக உள்ள மலங்கமுவ பாலம் 2007 ஆம் ஆண்டு வெள்ளப்பெருக்குக்கு அகப்பட்டு உடைந்துள்ளமையும்,

(ii) மேலும் 2010 மே 01ஆம் திகதி பெய்த மழையை அடுத்து பாலத்தின் எஞ்சியிருந்த பகுதியும் உடைந்து பாரிய சேதமொன்று ஏற்பட்டுள்ளதையும்,

(iii) இதன் காரணமாக மலங்கமுவ, சிரிமல்கொடை, கெந்தகொல்ல, ஹின்னாரங்கொல்ல, எட்டம்பகஹகந்துர, முத்துமால, கஹட்டரூப்ப அடங்கலாக பல்வேறு கிராமங்களில் வசிக்கும் பல்லாயிரக்கணக்கான குடியிருப்பாளர்களின் போக்குவரத்து நடடிவடிக்கைகள் முழுமையாக தடைப்பட்டுள்ளதால் மேற்படி மக்கள் சிரமத்திற்கு முகங்கொடுத்துள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வாறு 2 1/2 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் அதனைத் திருத்தி அமைக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்,

(ii) உரிய நியமங்களுக்கமைய பாலம் நிர்மாணிக்கப்படாமையால் அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை நிர்மாண ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

இச்சபைக்கு அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2010, யூலை 09, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0079 / '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் கொங்றீட் இட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெலிஅத்த பிரதேச செயலாளர் பிரிவின் வக்கமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட வக்கமுல்ல, அலுத்வெவ வீதியின் 100 மீற்றர் வரையிலான தூரம் தற்போது கொங்கிறீட் உடைந்து குன்றும் குழியுமாக முழுமையாக சேதமடைந்த நிலையிலிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்துபெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0046/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள மத ஸ்தாபனங்கள் எத்தனை என்பதையும்,

(ii) மாவட்ட அடிப்படையில் பௌத்த கோயில்கள், கிறிஸ்த்தவ ஆலயங்கள், ஹிந்துக் கோயில்கள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்,

(iii) ஒவ்வோர் மதங்களுக்கும் உரித்தான, பதிவு செய்யப்பட்ட குருமார்களின் எண்ணிக்கையினையும்,

(iv) மேலே (i), (ii), (iii) இன் அடிப்படையில் ஸ்தாபனங்கள் மற்றும் ஆட்களின் பெயர் மற்றும் முகவரிகளையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேலே கூறப்பட்ட ஸ்தாபனங்களுக்கு கடந்த 05 வருடங்களுக்குமாக, வருடாந்த அடிப்படையில் வழங்கப்பட்ட பணத்தின் தொகையினை அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0296/ '10

கௌரவ சுனில் ஹந்துனெத்தி,— நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) லுனாவ கடனீரேரி கருத்திட்டத்துடன் தொடர்புடைய வீதி அபிவிருத்திக்கென மொறட்டுவ மாநகர சபையிடம் ஒப்படைத்துள்ள கருத்திட்டங்களின் பெறுமதி எவ்வளவு என்பதையும்,

(ii) வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களின் பெறுமதி எவ்வளவு என்பதையும்,

(iii) பூர்த்தி செய்யப்படாத வீதிக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்,

(iv) பூர்த்தி செய்துள்ள கருத்திட்டங்கள் முறையான நியமங்களுக்கமைய மேற் கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) வேலைகள் பூர்த்தி செய்யப்படாத கருத்திட்டங்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0103/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பலாங்கொட நகர சபையின் நகர உறுப்பினர் திரு. சந்திரதாச நயிதுவாவடு, இந்துனில் எதிரிவிக்ரம சூரிய உட்பட குண்டர் குழுவொன்றினால் மரண அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து E1B 52/37 ஆம் இலக்கத்தின் கீழ் அம்பலாங்கொட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைச் செய்துள்ளாரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி முறைப்பாடு அம்பலாங்கொட பொலிசாரினால் விசாரணை செய்யப்பட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், எடுத்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2010 சனவரி 25 ஆம் திகதி அதிகாலையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக 2010.02.02 ஆம் திகதி உயிரிழந்த நகர சபை உறுப்பினர் திரு. நயிதுவாவடு, தம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக இவர் உயிரிழப்பதற்கு முன்னர் E1B 106/86 ஆம் இலக்கத்தின் கீழ் அம்பலாங்கொட பொலிசுக்கு முறைப்பாடொன்றைச் செய்துள்ளாரென்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) அது தொடர்பாக அம்பலாங்கொட பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(ii) மேற்படி முறைப்பாட்டின் பிரகாரம் இவரைத் தாக்கிய நபர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) இதுவரை தாக்கிய நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளார்களா என்பதையும்,

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(v) இத்தாக்குதல் மற்றும் படுகொலை தொடர்பில் சட்டத்தை நிலைநாட்ட அவர் எடுக்கும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0305/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையில் நிறைவேற்றதிகார சனாதிபதி பதவியை ஆளொருவர் எத்தனை தவணைகள் வகிக்கலாம் என்பதையும்,

(ii) அத்தவணைகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க எண்ணியுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனின், எத்தனை தவணைகள் வரைக்கும் என்பதையும்,

(iv) அவ்வாறு தவணைகளை அதிகரிப்பதில்லையெனின் நிறைவேற்றதிகார சனாதிபதி பதவியை இரத்துச் செய்வதற்கு அரசாங்கம் கருதுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0267/ '10

கௌரவ (செல்வி) கமலா ரணதுங்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 20 வருடங்களாக நிர்மாணப்பணிகள் தாமதமடைந்திருந்த, தேசிய எரிசக்தி நெருக்கடிக்கு தீர்வாயுள்ள, நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(ii) அதன் மூலம் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் மெகாவோட் அளவு எவ்வளவென்பதையும்,

(iii) இந்நிர்மாணப்பணிக்காக செலவு செய்யப்படும் நிதி எவ்வளவென்பதையும்,

(iv) இம்மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப்பணிகள் தாமதிக்கப் பட்டமையால் நாட்டுக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்,

(v) அப்பணிகளைத் தாமதமின்றிச் செய்தவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0053/ '10

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பாராளுமன்ற சட்டம் மூலம் கூட்டிணைக்கப்பட்டு சமூக சேவைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு நிதிகளை கண்காணிப்பதற்கு தற்பொதுள்ள பொறிமுறைகள் என்ன என்பதையும்,

(ii) கம்பனிகள் பதிவாளரிடம் பதிவு செய்து சமூக சேவைகள் அல்லது ஆய்வுப் பணிகள் அல்லது பரிந்துரைகளில் ஈடுபட்டுள்ள கம்பனிகளுக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு நிதிகளை கண்காணிப்பதற்கு தற்போதுள்ள பொறிமுறைகள் என்ன என்பதையும்,

(iii) அவ்விதமான கம்பனிகள் தேவைப்படுத்தப்பட்டவாறு தமது அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றனவா, வரி தொடர்பான கோவைகளைப் பேணுகின்றனவா, அவற்றிற்கு கிடைக்கின்ற வருமானம் தொடர்பில் செலுத்த வேண்டியுள்ள வரிகளை செலுத்துகின்றனவா என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 1999 முதல் 2010 வரையிலான காலப்பகுதியில் இனக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்திற்கு வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி எவ்வளவு என்பதையும், இந்நிதிகள் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டன என்பதையும்,

(ii) அந்நிதிகளைப் பெற்றுக் கொண்ட நோக்கத்திற்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஒப்புதல் அளித்ததா என்பதையும், மற்றும்

(iii) இந்நிதி பயன்படுத்தப்படும் முறை தொடர்பாக ஏதாவது அரசாங்க முகவரினால் கண்காணிக்கப்பட்டதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0345/ '10

கௌரவ மொஹமட் அஸ்லம்,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின், பேருவளை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள குடிசை வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அந்த ஒவ்வொரு வீட்டினதும் உரிமையாளரின்/வதியும் குடும்பத் தலைவரின் பெயர், முகவரி யாதென்பதையும்,

(iii) மேற்படி வீடுகளில் வதியும் உப குடும்பங்களின் தலைவர்களது பெயர், முகவரி யாதென்பதையும், ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், என்?

---

## திகதி குறிப்பிடப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா.61/ '10

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல

கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார ஜயசிங்க,— அரசியலமைப்பிற்கான பதினேழாவது திருத்தத்தின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதை மீளாய்வு செய்வதற்கும் அது நடைமுறைப்படுத்துவதற்காக மேலும் ஏதேனும் திருத்தங்கள் அவசியமா என்பது பற்றி அறிக்கை செய்வதற்குமான பாராளுமன்றத் தெரிகுழு,—

2001 ஆம் ஆண்டில் அரசியலமைப்பிற்கான பதினேழாவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு சான்றுப்படுத்தப் பட்டுள்ளதாலும்;

சொல்லப்பட்ட திருத்தத்தின் ஏற்பாடுகள் பல்வேறு அரச நிர்வாக மற்றும் நீதித்துறை நிறுவனங்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கான பல முக்கியமான சிறப்பம்சங் களை அறிமுகப்படுத்தியும் உள்ளடக்கியுமிருப்பதாலும்;

சொல்லப்பட்ட திருத்தங்கள் நீதியானதும் சுதந்திரமானதுமான சமூகமொன்றை உறுதிப்படுத்துவதைக் நோக்காகக் கொண்டிருப்பதாலும்;

அரசியலமைப்பிற்கான பதினேழாவது திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதாலும்;

(அ) அரசியலமைப்பிற்கான பதினேழாவது திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் நடை முறைப்படுத்தப்படுவதை மீளாய்வு செய்வதற்கும்;

(ஆ) அதன் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்கும்;

(இ) மேலும் ஏதேனும் திருத்தங்கள் அவசியமா என்பதைப் பரிசீலிப்பதற்கும்;

பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியல் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குழு இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. அக்குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) ஆட்களை, பத்திரங்களை மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும், எந்தவொரு நபரையும் பாராளுமன்றத்தின் முன்போ அல்லது அத்தகைய குழுவின்முன்போ தோற்றவும் அத்தகைய நபர் வசமுள்ள அல்லது அவரின் கட்டுப்பாட்டிலுள்ள எந்தவொரு பத்திரத்தையோ, புத்தகப் பதிவேட்டையோ அல்லது ஆவணத்தையோ சமர்ப்பிக்க ஆணையிடுதற்கும்;

(இ) குழுவின் தவிசாளர் முன்னிலையிலோ அல்லது அந்நோக்கத்திற்கென விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரின் முன்னிலையிலோ சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளும் சாட்சிகளின் சாட்சியத்தை வாய்மொழி விசாரணை மூலமாக ஊர்ஜிதம் செய்தற்கு அல்லது வேறுவிதமாக உறுதிசெய்தற்கு மற்றும் சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவிற்குத் துணை புரியும்பொருட்டு உரிய துறைகளிலுள்ள வல்லுநர்களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் மற்றும் பராளுமன்ற ஒத்திவைப்பு எதனையும் கருத்திற் கொள்ளாது தனது கூட்டத்தைக் கூட்டுவதற்கும் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஒரு வருடத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் தனது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.